மாகாணக் கல்வித் திணைக்களம்
வடக்கு மாகாணம்
தரம் - 05 புலமைப் பரிசில் பரீட்சை - 2022
பயிற்சிப் பரீட்சை - 03

EXAMINATION FOR GRADE FIVE STUDENTS FOR SELECTION TO SCHOOLS AND FOR THE AWARD OF BURSARIES, 2022

மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை, 2022

3

வினாத்தாள் - I

ஒரு மணித்தியாலம்

சுட்டெண் : .....

- **பரீட்சைக்குத் தோற்றும் உங்களுக்கான அறிவுறுத்தல்கள்.**
- உமது **சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.
- **மூன்றாம் பக்கத்தில்** உள்ள குறித்த இடத்திலும், உமது **சுட்டெண்ணை** எழுதுக.
- இவ்வினாத்தாளில் **40** வினாக்கள் உள்ளன **எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே** தருக.
- ஒவ்வொரு வினாவிற்கும் **மூன்று** விடைகள் வீதம் தரப்பட்டுள்ளன. அவற்றிடையே ஒவ்வொரு வினாவிற்கும் உரிய **சரியான விடையைத் தெரிவு செய்து, அதன் கீழ்க் கோடிடுக**.
- செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

பக்க இலக்கம்	பெற்ற புள்ளிகள்
2	
3	
4	
5	
6	
7	
8	
மொத்தம் இலக்கத்தில்	
மொத்தம் எழுத்தில்	

	பெயரும் ஒப்பமும்
முதலாவது பரீட்சகர் (வகுப்பாசிரியர்) புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகிறேன்.	..... பெயர் ..... ஒப்பம்
இரண்டாவது பரீட்சகர் (.....) முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகிறேன்.	..... பெயர் ..... ஒப்பம
மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பீட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகிறேன்.	..... பெயர் ..... ஒப்பம்
அதிபர் மேர்பாற்வை செய்தேன்	
வலய / மாகாண மேற்பார்வையாளர்	

www.keeu.lk

LEARN EASY

- KNOWLEDGE IS POWER -

www.learneasy.lk

மகத்தான கல்விக்கு
உங்கள் ஆசான்

zoom

- ICT
- Maths
- English
- Commerce
- Tamil
- History
- Science
- Sinhala
- இன்னும் பல

தரம்
01-A/L

Medium


தமிழ்/ English


76667-4945

தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள்
தரம் 1 தொடக்கம் 5 வரை நடைபெறுகின்றன


www.learneasy.lk || www.lkedu.lk

01. கட்டத்தின் உள்ளே உள்ள சித்திரத்திற்குப் பெருமளவில் ஒத்ததாக வரையப்பட்டுள்ள சித்திரம் எது?






(1)





(2)




(3)

02. அடைப்பில் இருக்கும் கூட்டத்துடன் சேர்ப்பதற்கு பொருத்தமான உருவினைத் தெரிவு செய்க.





(1)




(2)




(3)


03. பின்வரும் உருக்களுக்கு இடையே உள்ள சிறந்த தொடர்பின் அடிப்படையில் இரண்டு கூட்டங்களாகப் பிரிக்கத்தக்க முறையைத் தெரிவு செய்க.

			
A	B	C	D


(1) C,D உம் A,B உம் (2) A,D உம் B,C உம் (3) A,C உம் B,D உம்

04. தொடக்கத்தில் தரப்பட்டுள்ள உருவைப் பூரணப்படுத்துவதற்குப் பொருத்தமான பகுதியைத் தெரிவு செய்க.






(1)





(2)




(3)

05. உருவில் நிழற்றப்பட்ட பகுதியை நீக்கினால் கிடைக்கும் உருவம் யாது?






(1)




(2)




(3)

06.



உரு A




உரு B

உரு B இலுள்ள வடிவத்தினைப் போன்று எத்தனை வெவ்வேறு அமைவுகளை உரு A இல் இனங்காண முடியும்?


(1) 4 (2) 6 (3) 8


07. தரப்பட்ட உருவில் வெற்று அடைப்பிற்குப் பொருத்தமான உருவைத் தெரிவு செய்க.




(1)  (2)  (3) 

08. பின்வரும் தராசுகளை அவதானித்து நிறைகூடிச் செல்லும் ஒழுங்கினைச் சரியாகக் காட்டும் விடையைத் தெரிவு செய்க.





(1)  (2)  (3) 

09. 

படத்தில் தரப்பட்டுள்ள வட்டமானது 2020 ஆம் ஆண்டில் உள்ள நாட்களின் மொத்த எண்ணிக்கைக்கு இரண்டு நாட்கள் குறைவான எண்ணிக்கையைக் காட்டுகின்றது. எனின் நிழற்றப்பட்ட பகுதியை உள்ளடக்கும் நாட்கள் எத்தனை?

(1) 505 (2) 92 (3) 91


10. பின்வரும் பாடலினால் குறிப்பிடப்படுபவர் யார்?

உலகத்தினரால் போற்றப்படுபவன் நான்
பாங்கான கருத்துக்களை பகர்ந்திடுவேன்
நடக்கப்போவதை உணர்ந்திடுவேன்
கண்ணியமாக நடந்திடுவேன்


(1) விகடகவி (2) தீர்க்கதரிசி (3) அறிவாளி

www.lkedu.lk


11. கடதாசித்துண்டு A





கடதாசித்துண்டு B



கடதாசித்துண்டு A இல் இருக்கும் குறியீடு ⬡ மீது கடதாசித்துண்டு B இல் இருக்கும் குறியீடு I இருக்குமாறு கடதாசித்துண்டு A மீது, B இனை வைக்கும் போது காணத்தக்க உரு பின்வருவனவற்றுள் யாதாக அமையும்?

(1) 

(2) 

(3) 

12. எமது பாடசாலையின் தரம் 5 செயற்பட்டு மகிழ்வோம் போட்டியின் ஆண்கள் அணியில் உள்ள அனைவரும் உயரமானவர்கள் ஆவர். கமல் எமது பாடசாலையில் ஓர் உயரமான மாணவன் ஆவான் ஆகவே கமல் தரம் 5 செயற்பட்டு மகிழ்வோம் அணியில் உள்ளான் எனும் கூற்று

(1) நிச்சயமாக உண்மை (2) பெரும்பாலும் உண்மை (3) கூற முடியாது

13. ஒரு கூட்டத்தில் பெண்கள் மட்டும் இருந்தனர். அதில் ஒரு பெண்ணின் இரு பிள்ளைகளும் இன்னொரு பெண்ணின் நான்கு பிள்ளைகளும் இருந்தனர். எனின் அக்கூட்டத்தில் இருந்திருக்கக் கூடிய பெண்களின் மிகக் குறைந்த எண்ணிக்கை.

(1) 6 (2) 7 (3) 8

14. கீழே நான்கு அட்டைகளில் குறியீடுகளுடன் தசம எண்கள் காணப்படுகின்றன.



தரப்பட்ட நான்கு அட்டைகளிலும் உள்ள தசம எண்களை ஏறுவரிசைப்படி அடுக்கி வைத்தபோது குறியீடுகள் அமையும் ஒழுங்குமுறை பின்வருவனவற்றுள் யாது?

(1) x ⊖ Σ ⏀ (2) ⏀ x ⊖ Σ (3) Σ ⊖ x ⏀

15. பொதி செய்யப்பட்ட பக்கற் ஒன்றில் ஒட்டப்பட்ட சிட்டை ஒன்றின் விபரம் கீழே காட்டப்பட்டுள்ளது.

YY/MM/DD			
A →	19 – 08 – 03	C →	850.00
B →	21 – 05 – 04	D →	11340232

உற்பத்தி செய்த திகதிக்கும் காலாவதியாகிய திகதிக்கும் இடையே உள்ள காலத்தை காட்டும் சரியான விடை

(1) 2 வருடங்கள் 11 மாதங்கள் 5 நாட்கள்

(2) 1 வருடம் 9 மாதங்கள் 1 நாள்

(3) 1 வருடம் 3 மாதங்கள் 1 நாள்

www.lkedu.lk

16. விரைவு கணிதப் போட்டியை ஐந்து மாணவர்கள் முடித்த விதம் பின்வருமாறு காட்டப்பட்டுள்ளது. அவற்றை விரைவாக முடித்தவர்களின் அடிப்படையில் ஒழுங்குபடுத்தினால் வரும் விடை எது?
A – பாலா – 5 நிமிடங்கள்
B – பூபதி – 3 நிமிடங்கள் 35 விநாடிகள்
C – றூபா – போட்டியை முடிக்கவில்லை
D – சாந்தி – 4 நிமிடங்கள் 34 விநாடிகள்
E – வர்ணா – 6 நிமிடங்கள்
(1) BCDAE (2) ACBDE (3) BDAEC

17. தரப்பட்டுள்ள எண் கோலத்தில் புள்ளிக்கோட்டில் இடம்பெற வேண்டிய எண் யாது?
$2453 \rightarrow 5$, $8761 \rightarrow 4$, $7086 \rightarrow 3$, $9621 \rightarrow$ ……
(1) 9 (2) 1 (3) 7

18. அன்வர் சரத்திலும் திறமைசாலி மேரி அன்வரிலும் திறமை குன்றியவர் இதற்கேற்ப சரியான கூற்று
(1) சரத்தை விட மேரி திறமை கூடியவர்.
(2) மூவரிலும் அன்வர் திறமை கூடியவர்.
(3) சரத்தும் மேரியும் சமமான திறமை கொண்டவர்கள்

19. நீள்வட்ட வடிவ மைதானத்தைச் சுற்றி 11 முறை ஓடிய வீரன் ஒருவன் 3500 மீற்றர் தூரத்தை நிறைவு செய்வதற்கு இன்னும் 200 மீற்றர் தூரம் ஓட வேண்டும். அவ்வாறெனின் மைதானத்தின் ஒரு சுற்று வட்டத்தின் தூரம் யாது?
(1) 300m (2) 350m (3) 500m

20. விளையாட்டுப்போட்டிக்கு அழைக்கப்பட்ட விருந்தினர்கள் உணவுக்காக மேசைகளைச் சுற்றிப் அமர்த்தப்பட்டுள்ள விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

- மேசை ஒன்றிற்கு ஐந்துபேர் வீதம் அமர்த்தப்பட்டபோது இரண்டு மேசைகள் மீதியாக இருந்தன.
- மேசை ஒன்றிற்கு நாலுபேர் வீதம் அமர்த்தப்பட்டபோது பத்துபேர் அமர்வதற்கு இடமில்லாமல் இருந்தது.


மேலுள்ள தகவல்களின் அடிப்படையில் விளையாட்டுப் போட்டிக்கு வந்த விருந்தினர்களின் எண்ணிக்கையும், மேசைகளின் எண்ணிக்கையும் முறையே
(1) 90 விருந்தினர்கள் 20 மேசைகள்
(2) 40 விருந்தினர்கள் 10 மேசைகள்
(3) 20 விருந்தினர்கள் 8 மேசைகள்

21. மிகப்பெரிய நான்கிலக்க எண்ணுடன் மிகச்சிறிய மூவிலக்க எண்ணினைக் கூட்டினால் வரும் எண் யாது?
(1) 10009 (2) 10099 (3) 10998

22. உணவகமொன்றிற்கு சில இளைஞர்கள் உணவு உண்பதற்காகச் செல்கின்றனர். அவர்கள் உண்ட உணவிற்கான செலவு ரூ 8190.00 ஆகும். செலவை எல்லா இளைஞர்களும் சமமாகப்பங்கிடத் தீர்மானித்தனர். சமமாகப் பங்கிட்ட பின்னர், இவர்களில் இரண்டு இளைஞர்கள் தமது பணப்பையைக் கொண்டுவரவில்லை எனக் கூறியதால் ஏனைய நண்பர்கள் ஒவ்வொருவரும் 260 ரூபாவை மேலதிகமாகச் செலுத்தினர் எனின் உணவகத்திற்குச் சென்ற நண்பர்கள் எத்தனை பேர்?
(1) 7 பேர் (2) 8 பேர் (3) 9 பேர்

www.ikedu.lk

23. தரப்பட்டுள்ள உருவில் இருந்து கோடுகளின் வழியே வெட்டி எடுக்கக் கூடிய முக்கோண வடிவங்களின் உயர்ந்தபட்ச எண்ணிக்கை.




(1) ஐந்து ஆகும் *(2)* பன்னிரண்டு ஆகும் *(3)* ஆறு ஆகும்

24. அமலன் அவரது வயதைக் கேட்டால் நேராக சொல்ல மாட்டார். என் வயதிலுள்ள இரு இலக்கங்களையும் கூட்டினால் *13* வரும் அவ்விரு இலக்கங்களையும் இடம் மாற்றி எழுதினால் *45* கூடுதலாக வரும் எனக் கூறுவார். அவ்வாறாயின் அமலனின் வயது யாது?

(1) 67 (2) 49 (3) 58

25. அலுவலகம் ஒன்றில் தேநீர் இடைவேளையின் போது சிற்றுண்டியாக பயன்படுத்தப்பட்ட விசுக்கோத்துக்களின் விபரம் கீழே காட்டப்பட்டுள்ளது.



ஆரம்பத்தில் இருந்தவை | *3* நிமிடத்திற்கு பின்னர் | *6* நிமிடத்திற்கு பின்னர் | *12* நிமிடத்திற்கு பின்னர்


இவ் ஒழுங்கிற்கு ஏற்ப விசுக்கோத்துக்களை மேலும் எவ்வளவு நேரத்தில் முழுமையாக உண்டு முடிக்கலாம் எனக் கூறமுடியும்.

(1) 24 நிமிடங்களில் (2) 14 நிமிடங்களில் (3) 12 நிமிடங்களில்


26. கொழும்பிலிருந்து காலியை நோக்கி பேருந்து ஒன்று செல்கின்றது. பேருந்திலுள்ள ஆண்களின் எண்ணிக்கை அதிலுள்ள பெண்களின் எண்ணிக்கையிலும் அரைவாசியாகும். *13* பெண்கள் பேருந்திலிருந்து இறங்குகின்றனர். *5* ஆண்கள் ஏறுகின்றனர் இப்போது ஆண்களின் எண்ணிக்கை பெண்களின் எண்ணிக்கையுடன் சமமாகுகின்றது. ஆரம்பத்தில் பேருந்தில் இருந்த பயணிகளின் எண்ணிக்கை எத்தனை?

(1) 54 (2) 65 (3) 18

27. கீழே தரப்பட்ட கோலத்திற்கேற்ப வினாக்குறி இடப்பட்ட கட்டத்திற்கு பொருத்தமான எண் யாது?



(1) 20 (2) 11 (3) 12

28. 


தாயக்கட்டை ஒன்றில் எவையேனும் எதிர்ப் பக்கங்களில் காணப்படும் புள்ளிகளின் எண்ணிக்கையினது கூட்டுத்தொகை *7* ஆகும். அவ்வாறான நான்கு தாயக்கட்டைகளை ஒன்றாக சேர்த்து ஒட்டிக் கீழே தரப்பட்டுள்ளது. ஒன்றை ஒன்று நோக்கும் வண்ணம் ஒட்டப்பட்டுள்ள இரண்டு பக்கங்களிலும் காணப்படும் புள்ளிகளின் கூட்டுத்தொகை *8* ஆகும் பக்கம் A யில் காணப்படும் புள்ளிகள் எத்தனை?

(1) 3 *(2) 4* *(3) 6*

www.ikeau.lk


29. இனிப்பு போத்தல் ஒன்றின் விலை ரூபாய் 150.00 ஆகும். கடைக்காரரிடம் இரண்டு இனிப்பு வெற்றுப் போத்தல்களைக் கொடுத்தால் அவர் ஒரு இனிப்புப் போத்தலை இலவசமாகக் கொடுப்பார் எனின், ரூபாய் 750.00 வைத்திருக்கும் ஒருவர் பெற்றுக்கொள்ளக் கூடிய இனிப்புப் போத்தல்களின் உயர்ந்தபட்ச எண்ணிக்கை யாது?
(1) 8 (2) 9 (3) 5

30. சிறிய அளவிலான சதுரமுகி மரக்குற்றித் தொகுதிகளைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட கட்டமைப்பு ஒன்று உருவில் காட்டப்பட்டுள்ளது. பெரிய அளவிலான சதுரமுகி மரத்துண்டினைப் பூரணப்படுத்துவதற்கு சிறிய அளவிலான சதுரமுகி மரக்குற்றிகள் மேலும் எத்தனை தேவை?



(1) 24 (2) 12 (3) 18

31. கீழே காட்டப்பட்டுள்ள தராசு சமநிலையில் உள்ளது.



இத்தராசில் ○ இன் நிறை 5kg எனின் ▭ இதன் நிறை யாது?
(1) 4kg (2) 3kg (3) 5kg

32. கரப்பந்தாட்டப் போட்டியொன்றில் வெற்றிபெற்ற அணி தமது அணி வீரர்களுக்கிடையே கைகுலுக்கிக் கொண்டதுடன் இரண்டு நடுவர்களுடனும் கைகுலுக்கிக் கொண்டனர். எனின், அங்கு இடம்பெற்ற கைகுலுக்கல்களின் எண்ணிக்கை யாது?.
(1) 15 (2) 27 (3) 28

33. பாடசாலை ஒன்றில் நான்காம் தரத்தில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கையினதும் ஐந்தாம் தரத்தில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கையினதும் மொத்தத்தொகையானது, நான்காம் தரத்தில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கையின் மூன்று மடங்குடன் மூன்று கூறியதுமாகும். எனின், இரண்டு வகுப்புக்களிலும் உள்ள மாணவர்களின் எண்ணிக்கை
(1) 51 (2) 20 (3) 53

34.

3	4	2	3	5	க	✡
⇨	B	I	அ	M	ம	✿
A	7	L	P	↱	◇	ப

இங்கு அதிக தடவைகள் இடம் பெற்றுள்ளவை
(1) எழுத்துக்கள் (2) ஆங்கில எழுத்துக்கள் (3) குறியீடுகள்


35. கறுப்பு நிறப் பெட்டி ஒன்றில் 4 சிவப்பு நிற மாபிள்களும் 5 நீல நிற மாபிள்களும் 4 பச்சை நிற மாபிள்களும் இருந்தன. இம் மாபிள்கள் முழுவதும் மூன்று சந்தர்ப்பங்களில் கையை விட்டு வெளியே எடுக்கப்பட்டன. முதலிரண்டு சந்தர்ப்பங்களில் வெளியே எடுக்கப்பட்ட மாபிள்களின் விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

முதலாவது சந்தர்ப்பம் - 2 சிவப்பு, 1 பச்சை
இரண்டாவது சந்தர்ப்பம் - 1 சிவப்பு, 3 நீலம், 1 பச்சை

இதன்படி மூன்றாவது சந்தர்ப்பத்தில் வெளியே எடுக்கப்பட்ட மாபிள்களின் சரியான விபரம்
(1) 1 பச்சை, 2 நீலம், 1 சிவப்பு
(2) 1 சிவப்பு, 2 பச்சை, 2 நீலம்
(3) 1 நீலம், 1 சிவப்பு, 2 பச்சை

www.lkedu.lk

36. அருகில் உள்ள தாயக்கட்டையானது தடவைக்கு ஒரு பக்கம் எனும் அடிப்படையில் அம்புக்குறி காட்டும் திசையில் எழுத்துக்கள் இலக்கங்கள் மீது தொடும் வண்ணம் ஐந்து தடவைகள் உருட்டப்படுகிறது. தாயக்கட்டை 5 எனக் குறிப்பிடப்பட்ட இடத்தில் இருக்கும் போது எழுத்து D ஆனது தாயக்கட்டையின் எப்பக்கத்தில் இருக்கும்.




(1) முன் பக்கத்தில்
(2) கீழ்ப் பக்கத்தில்
(3) மேற் பக்கத்தில்

37. சதுர வடிவத் தகட்டிலிருந்து நிழற்றிக் காட்டப்பட்டுள்ள சிறிய இரண்டு பகுதிகள் வெட்டி நீக்கப்பட்டுகின்றன. இப்போது மீதியாகவுள்ள பகுதியின் சுற்றிவர உள்ள நீளம், முன்னர் இருந்த தகட்டின் சுற்றிவர உள்ள நீளத்திற்கு,



(1) மிகக்குறைவனது
(2) சமனானது
(3) மிகக்கூடுதலானது

38. அருகில் உள்ள A,B,C ஆகியன பற்சக்கரங்கள் ஆகும். C சக்கரத்தின் 40 பற்களும் B சக்கரத்தை இயக்குகின்றது. 80 பற்களைக் கொண்ட B சக்கரம் A சக்கரத்தை இயக்குகின்றது. A சக்கரம் 200 பற்களைக் கொண்டது.



C ஒருமுறை பூரணமாகச் சுழன்று வந்தால் A சக்கரமானது

(1) 5 முறை சுழலும் (2) $\frac{1}{5}$ முறை சுழலும் (3) 2 $\frac{1}{2}$ முறை சுழலும்

39. ஒரு வரிசையில் ஆண், பெண், ஆண், பெண் என்ற ஒழுங்கில் 42 மாணவர்கள் மட்டும் அமர்ந்திருந்தனர். எனினும் இவ் வரிசையின் இறுதியில் மூன்று பெண்கள் தொடர்ச்சியாக அமர்ந்திருந்ததைக் காண முடிந்தது. அவ் வரிசையில் உள்ள பெண்கள் எத்தனை பேர்?

(1) 23 (2) 22 (3) 20

40. குமரன் ஓட்டப்போட்டி நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டபோது நடைபெற்ற ஐந்து சந்தர்ப்பங்கள் ஒழுங்கின்றித் தரப்பட்டுள்ளன. அவற்றை ஒழுங்குபடுத்தும்போது சரியாக அமையும் விடை எது?

A – காலில் இரத்தம் வழிந்தது
B – போட்டி ஆரம்பமானது
C – குமரன் போட்டியில் கலந்து கொள்ளச் சென்றான்
D – போட்டியில் இருந்து விலகினான்
E - இடையில் கால் தடுக்கி வீழ்ந்தான்

(1) BDEAC (2) CBDEA (3) CBEAD

மாகாணக் கல்வித் திணைக்களம்
வடக்கு மாகாணம்

தரம் - 05 புலமைப் பரிசில் பரீட்சை - 2022
பயிற்சிப் பரீட்சை - 3

EXAMINATION FOR GRADE FIVE STUDENTS FOR SELECTION TO SCHOOLS AND FOR THE AWARD OF BURSARIES, 2022

மாணவர்களை பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்குமாகத் தரம் 5 மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை, 2022

3

வினாத்தாள் - II

1 மணித்தியாலம் 15 நிமிடம்

சுட்டெண் : .....

பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள் :

- **உமது சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் **புள்ளிக்கோட்டின்** மீது எழுதுக.
- **மூன்றாம் பக்கத்தில் உள்ள** குறித்த இடத்திலும் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
- இவ்வினாத்தாளில் **60** வினாக்கள் உள்ளன. சில வினாக்களில் உபபகுதிகளும் உள்ளன.
- **எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே எழுதுக.**
- விடைகள் எழுதப்படவேண்டிய வினாக்களின் விடைகளைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- விடையின் கீழே கோடிடுமாறு கேட்கப்பட்டிருக்கும்போது **சரியான விடையைத் தெரிவு செய்து, அதன் கீழே கோடிடுக.**
- செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

பக்க இலக்கம்	பெற்ற சரியான புள்ளிகளின் எண்ணிக்கை
02	
03	
04	
05	
06	
07	
08	
இறுதிப் புள்ளிகள்	
இலக்கத்தில்	
எழுத்தில்	

	பெயரும் ஒப்பமும்
முதலாவது பரீட்சகர் (வகுப்பாசிரியர்) புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகிறேன்.	..... பெயர் ..... ஒப்பம்
இரண்டாவது பரீட்சகர் (.....) முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகிறேன்.	..... பெயர்
மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பீட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகிறேன்.	..... பெயர் ..... ஒப்பம்
அதிபர் மேற்பார்வை செய்தேன்	
வலய / மாகாண மேற்பார்வையாளர்	

STUDY ONLINE

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம்
A/L வரையான
எல்லா
தரத்தினருக்கும்
அனைத்துப்
பாடங்களையும்



இணையத்தில் கற்றுக்கொள்ளலாம்

WWW.LKEDU.LK

facebook.com/lkedulk facebook.com/groups/lkedu

ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக, பார்க்க மறவாதீர்கள்...

01. பின்வரும் பந்தியை வாசியுங்கள்.

"ஐயனே! தாங்கள் இங்கேயே இருக்க வேண்டும். தங்களுக்குத் தொண்டு செய்ய அடியேனும் ஐயாயிரம் வேடர்களும் இருக்கின்றோம். கங்கைக்கரை சுகமான இருப்பிடம், இங்கு பூசைக்குத் தேவையான நறுமணம் நிரம்பிய மலர்கள் இருக்கின்றன, நல்ல நல்ல போர்வைகள் இருக்கின்றன, இனிய கனிகள் இருக்கின்றன, பகைவரை வெல்லுவேன், கிழங்குகளைக் கொணர்வேன், எட்டுத் திசைகட்கும் வழி சொல்லுவேன்! அடியேன் எல்லாத் தொண்டுகளையும் அன்புடன் செய்வேன், ஆதலால் இங்கேயே இருக்க வேண்டும்" என்று உள்ளம் உருகி உரைத்தான்.

- பந்தியைத் துணையாகக் கொண்டு விடை எழுதுக.

i. சுகமான இருப்பிடம் எது என்று கூறப்பட்டுள்ளது?

……...

ii. இராமனுக்கு தொண்டு செய்ய எத்தனை வேடர்கள் இருக்கின்றனர்?

……...

iii. "நண்பரை" என்பதன் எதிர்க் கருத்துச் சொல்லை எழுதுக.

……

iv. அடுக்கு மொழி ஒன்றினைத் தருக.

……

v. "திக்கு" என்பதன் ஒத்த கருத்துச் சொல்லை எழுதுக.

……

vi. "கூறினான்" என்ற கருத்தைத் தரும் சொல்லை எழுதுக.

……

02. உயர்திணை இறந்தகால பன்மை வினைச் சொல்லின் கீழ்க் கோடிடுக.

1. பறந்தது *2.* வருவான் *3.* படித்தார்கள்

03. தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியம் ஒன்று எழுதுக.

தனது / மகாத்மாகாந்தி / வாழ்க்கையில் / சத்தியத்தைத் / இடம்பிடித்தார் / கடைப்பிடித்து / வரலாற்றில்

……

04. பொருத்தமான இடங்களில் நிறுத்தக் குறிகளை இடுக.

கல்விக்கு அழகு கசடற மொழிதல் என்றனர் நம் முன்னோர்

05. பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் உள்ள சரியாக எழுத்துக் கூட்டல் உள்ள சொல்லை அடைப்புக் குறியினுள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

i. அன்று தொட்டு இன்று வரை …… (நாகரீகம், நாகரிகம்) மாற்றமடைந்து வருகிறது.

ii. அவள் புதுவருட தினத்திற்கு …… (புடைவை, புடவை) கடையில் ஆடை வாங்கினாள்.

06. **பின்வரும் பழமொழிக்குப் பொருத்தமான கருத்தினைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.**

i. ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்

.....

ii. பின்வரும் பழமொழியைப் பூர்த்தி செய்யப் பொருத்தமான சொல்லைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.

சிறுதுளி பெரு .....

07. **பின்வரும் இணைமொழிகளைப் பூர்த்தி செய்க.**

i. குன்றும் .....

ii. பேரும் .....

08. **பின்வரும் தொடர்மொழிக்குப் பொருத்தமான தனிச் சொல்லை எழுதுக.**

i. அறிஞர் வாதிடும் களம் .....

ii. இலை, தழை கொண்டு வேயப்பட்ட குடிசை .....

09. **பின்வரும் ஒருமை வாக்கியத்தை பன்மை வாக்கியமாக மாற்றி எழுதுக.**

மரத்தினது வேர் நீரை நாடிச் சென்றது.

.....

10. **பின்வரும் ஒவ்வொரு வாக்கியமும் சரியாயின் "✓" எனவும் பிழையாயின் "✗" எனவும் எதிரேயுள்ள அடைப்புக்குறிக்குள் அடையாளம் இடுக.**

i. கிராமியப் பாடல்கள் கலை நயம் மிக்கது. ( )

ii. குருவிக் கூட்டம் வானத்தில் பறந்தன. ( )

iii. நகமும் சதையும் ஒன்றிலிருந்து ஒன்று பிரிக்க முடியாதவை. ( )

iv. நான் தம்பியுடன் கடைக்குப் போனேன். ( )


11. **தரப்பட்டுள்ள ஆங்கிலச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொற்களை எழுதுக.**

i. Rainbow .....

ii. Waterfall .....

12. **பின்வரும் ஒவ்வொரு படத்திற்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.**





i. ..... ii .....

13. **கீழே தரப்பட்டுள்ள சொற்களைச் சரியாக ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியமாக்கி எழுதுக.**

i. floor / I / sweep / the

.....

ii. This / a / mosque / is

.....

www.ikedu.lk

14. "பதாதா" என்ற சிங்களச் சொல்லுக்குரிய தமிழ்ச் சொல்லை எழுதுக.

……


15. பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் சொல்லப்படும் விதத்தினைத் தமிழில் எழுதுக.

வாருங்கள் பிள்ளைகள்

……


16. 30007 இந்த எண்ணை சொற்களில் எழுதுக.

……..

17. 

எண்சட்டத்தில் நூறாமிடத்தில் மேலும் ஒரு மணியைச் சேர்த்த பின் வகை குறிக்கப்படும் எண்ணை இலக்கத்தில் எழுதுக.

…….

18. 

கட்டத்தில் உள்ள மீன்களின் எண்ணிக்கையை உரோம எண் குறியில் எழுதுக.

……


19. ஒரு பாடசாலையில் 1078 பெண்பிள்ளைகளும் 836 ஆண்பிள்ளைகளும் உள்ளனர்.

i. பாடசாலையில் உள்ள மாணவர்களின் மொத்த எண்ணிக்கை யாது?

……

ii. பாடசாலையில் உள்ள ஆண்பிள்ளைகளிலும் பார்க்க எத்தனை பெண்பிள்ளைகள் கூடுதலாக உள்ளனர்?

……

20. 

கட்டத்தினுள் உள்ள எல்லா எண்களையும் பயன்படுத்தி பொதுவித்தியாசம் 4 ஆகவுள்ள எண் கோலம் ஒன்றை ஆக்கி எழுதுக.

3, ……., ……., ……, ……

21. 812 இனை 4 இனால் வகுக்கும் போது கிடைக்கும் விடை யாது?

……

22. 


இவ்வுருவில் 0.5 ஐ நிழற்றுவதற்கு மேலும் எத்தனை கட்டங்கள் நிழற்றப்பட வேண்டும்?

……

www.ikedu.lk

23. A,B,C என்ற ஒழுங்கில் இடங்கள் அமைந்துள்ளன. A என்ற இடத்திலிருந்து C வரையுள்ள தூரம் 9km 650m ஆகும். B என்ற இடத்திலிருந்து C வரையுள்ள தூரம் 3km 860m ஆகும். A என்ற இடத்திலிருந்து B வரையுள்ள தூரம் யாது?

……km……m

24.  உருவில் காட்டப்பட்டுள்ள திண்மத்தின் உச்சிகளினதும் முகங்களினதும் மொத்த எண்ணிக்கை யாது?

……

25. 3kg 750g கடலையினை ஒரு பையில் 250g வீதம் எத்தனை பைகளில் இடலாம்?

……

26. நிவேஷ் ஓர் இடத்திலிருந்து தெற்குத் திசையில் 8m சென்று அவனது இடதுகைப்பக்கமாகத் திரும்பி மேலும் 8m சென்றான். அவ்விடத்திலிருந்து வடக்குத் திசையில் 8m சென்றான். எனின் அவன் இப்போது பயணத்தை ஆரம்பித்த இடத்திலிருந்து எந்தத் திசையில் உள்ளான்?

……


27. வீட்டிலிருந்து புறப்பட்ட ஆனந் 3 மணித்தியாலம் 40 நிமிடம் பயணித்த பின்னர் பி.ப. 3.10 இற்கு எரிபொருள் நிரப்பு நிலையத்தை அடைந்தான். ஆனந் வீட்டிலிருந்து புறப்பட்ட நேரம் யாது?

……

28. பின்வரும் சிட்டையைப் பூரணப்படுத்துக.

பொருள்	வாங்கிய அளவு	ஒரு கிலோகிராமின் விலை ரூபாய்	சதம்	பெறுமதி ரூபாய்	சதம்
பருப்பு	4kg	85	00	i) …….	……
சீனி	250g	ii) …….	……	36	00
மொத்தம்				376	00

29. மாணவர் குழுவொன்று அதிகம் விரும்பும் மலர் வகை பற்றிய தகவல்கள் வரைபில் தரப்பட்டுள்ளன.



i. அலரியை விரும்பும் மாணவர்களின் எண்ணிக்கையின் இரு மடங்கு எண்ணிக்கை யானோர் ரோசாவை விரும்புகின்றனர் எனின் அலரியை விரும்புவோரின் எண்ணிக்கையை வரைபில் குறித்துக் காட்டுக.

ii. குழுவில் உள்ள மொத்த மாணவர் தொகை எவ்வளவு?

……..

30. நான்கு இதழ்களைக் கொண்ட பூ எது?
(1) நாகலிங்கப் பூ (2) நாகமரப் பூ (3) தென்னம் பூ

31. அனேக வித்துக்களைக் கொண்ட பழங்கள் மாத்திரம் இடம்பெறும் விடை யாது?
(1) மாம்பழம், கொய்யாப்பழம், மாதுளம் பழம்
(2) பப்பாசிப்பழம், றம்புட்டான், கொய்யாப்பழம்
(3) மாதுளம் பழம், கொய்யாப்பழம், பப்பாசிப்பழம்

32. இரும்பினால் ஆக்கப்பட்ட உபகரணம் எது?
(1) புல்லாங்குழல் (2) கடகம் (3) அலவாங்கு

33. காற்று வலுசக்தி பயன்படுத்தப்படும் சந்தர்ப்பம் அல்லாதது
(1) ஆடை கழுவுதல் (2) நெல்தூற்றுதல் (3) ஈரத்துணி உலர்த்துதல்

34. ஐந்து வயது தொடக்கம் பத்து வயதையுடைய சிறுவர்களுக்கு ஆரோக்கியமான உணவு மிகவும் அவசியமானது எனக் கருதப்படுவதற்கான காரணம்
(1) சிறுவர்களின் வளர்ச்சி ஒரே தடவையில் அதிகரிக்கின்றது.
(2) சிறுவர்களின் வளர்ச்சி படிப்படியாகத் தொடர்ந்து அதிகரிக்கின்றது.
(3) அவர்களின் செயற்பாடுகளின் மட்டத்திற்கு ஏற்ப குறைந்தளவு சக்தியைப் பெறுவதற்கு

35. தேசியக் கொடியில் பச்சை, செம்மஞ்சள், சிவப்பு நிறங்கள் குறித்து நிற்பவை.
(1) இனங்களுக்கிடையிலான ஒற்றுமை
(2) எமது நாட்டின் தனித்துவம்
(3) பல்வேறு இனங்களின் பிரதிநிதித்துவம்

36. பச்சை நிறத்தைப் பெறுவதற்கு சமமான அளவில் கலக்கக் கூடிய இரண்டு நிறங்களும் எவை?
(1) நீலமும் மஞ்சளும் (2) நீலமும் சிவப்பும் (3) சிவப்பும் மஞ்சளும்

37. பிறப்பு, இறப்பு சான்றிதழைப் பெற்றுக் கொள்வதற்கும், நன்னடத்தைச் சான்றிதழைப் பெறுவதற்கும் செல்ல வேண்டிய இடங்கள் முறையே
(1) பிரதேச செயலகம், கிராம அதிகாரி அலுவலகம்
(2) கிராம அதிகாரி அலுவலகம், பிரதேச செயலகம்
(3) பிரதேச சபை, பிரதேச செயலகம்


38. வீட்டுச் சூழலில் இயற்கையாகக் காணப்படும் பிராணி
(1) நாய் (2) கபர கொய்யா (3) கோழி

39. பல்கூட்டுச் சந்தைகளில் பணக் கொடுக்கல் வாங்கல் செய்ய அதிகம் பயன்படுத்தப்படுவது
(1) தாள் நாணயங்களும் குற்றி நாணயங்களும்
(2) கடன் அட்டை
(3) காசுக் கட்டளை

40. மாப்பொருள் அதிகளவில் கொண்ட உணவு எது?
(1) பலாக்காய் (2) சோயா அவரை (3) எள்ளு

41. உடலின் தொழிற்பாடு அதிகமாகக் கொண்ட விளையாட்டு எது?
(1) தத்திப் பிடித்தல் (2) கரம் (3) சதுரங்கம்

42. பின்வருவனவற்றுள் பிரகாசமாக ஒளிரும் மின்குமிழ் எது?




(1) (2) (3)

43. மூன்று மாதங்களுக்கு மேற்படாத காலத்தினுள் விளைச்சல் தரக்கூடிய தாவரங்கள்
(1) பாகல், மா, பீர்க்கு
(2) பலா, வெண்டி, பாகல்
(3) தக்காளி, கத்தரி, பயற்றை

44. தேசப்படத்தில் புகையிரதப் பாதை, பெருந்தெரு, குளம் என்பவற்றைக் குறித்துக் காட்டும் நிறங்கள் முறையே
(1) கறுப்பு, சிவப்பு, நீலம்
(2) சிவப்பு, நீலம், பச்சை
(3) சிவப்பு, கறுப்பு, நீலம்

45. மயக்கம் அடைந்த ஒருவருக்கு உடனடியாகச் செய்யத்தகாத செயல் யாது?
(1) நன்கு சுவாசிக்கக் கூடிய சூழலை வழங்குதல்
(2) இறுக்கமான ஆடைகளைத் தளர்த்துதல்
(3) இளஞ்சூடான நீரைப் பருகக் கொடுத்தல்

46. 
பாத்திரத்தில் உள்ள நீர், துவாரங்களின் ஊடாக வேறுபட்ட தூரங்களில் பீச்சப்படுவதற்கான காரணம் யாது?
(1) மேலே செல்லச் செல்ல அமுக்கம் குறைவடைதல்
(2) கீழே செல்லச் செல்ல அமுக்கம் குறைவடைதல்
(3) பாத்திரத்தின் அடியில் அமுக்கம் குறைவு


47. மனிதனின் அடிப்படைத் தேவைகள் அல்லாதவை
(1) உடை, வீடு, நீர்
(2) காற்றோட்டம், உணவு, பாதுகாப்பு
(3) வானொலி, தொலைபேசி, கணினி

48. நாம் பொது இடங்களில் தவறாக நடந்து கொள்ளும் சந்தர்ப்பங்களில் ஒன்று
(1) அமைதியாக ஏனையோருக்கு இடைஞ்சலின்றி நடத்தல்
(2) உரத்துப் பேசி ஏனையோருக்கு இடைஞ்சல் விளைவித்தல்
(3) வரிசையில் ஒழுங்காக நிற்றல்

49. வயர்லெஸ் வேல்ட் எனும் சஞ்சிகையில் வெளியிட்ட ஒரு கட்டுரையில் "தரையிலிருந்து வானில் செய்மதிகளை அனுப்ப முடியும் எனவும் அச்செய்மதிகளைப் பயன்படுத்தி செய்திப் பரிமாற்ற முறையொன்றினை உருவாக்க முடியும்" எனவும் குறிப்பிட்டிருந்தவர் யார்?


(1)


(2)


(3)

50. கட்புல செவிப்புல சாதனத்தினுள் அடங்காதது.
(1) வானொலி (2) தொலைக்காட்சி (3) கணினி

51. பராக்கிரம சமுத்திரம், ரிட்டிகல, கப்ரன் டோசன் என்பன முறையே
(1) குளம், பெருங் கொடி, மலை
(2) குளம், மலை, கோபுரம்
(3) குளம், படிக்கல், மலை

52. இலங்கையில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த புனித நகரம் பின்வருவனவற்றுள் எது?
(1) சிகிரியா (2) கிளிநொச்சி (3) அனுராதபுரம்

53. வெளிநாட்டவர் எமக்குப் பழக்கப்படுத்திய தவறான பழக்கவழக்கங்களை மாத்திரம் கொண்ட விடை.
(1) மதுபானம், போதைப்பொருள் பாவனை, புகைப்பிடித்தல்
(2) மதுபானம், பெருந்தெருக்கள், தேயிலை உற்பத்தி
(3) தேயிலை உற்பத்தி, புகையிரதப் பாதை, பெருந்தெருக்கள்

54. சிறகு இல்லாத பிராணி எது?
(1) கிளி (2) கொக்கு (3) நண்டு

55. பிராணிகளின் இருப்புக்கு தீங்கு விளைவிக்கக் கூடிய மனித செயற்பாடுகள் மட்டும் காணப்படும் விடை
(1) இரசாயனப் பசளையிடுதல், மரங்களை வெட்டுதல்
(2) சேதனப் பசளையிடுதல், கொதி நீரைக் கொட்டுதல்
(3) வாழ்விடங்கள் அமைத்தல், பிராணிகளைக் கொல்லுதல்

56. அடிப்படைத் தையல் வகைகள் எவை?
(1) சிறுநூலோடி, கம்பளித் தையல்
(2) சிறுநூலோடி, பெருநூலோடி
(3) பெருநூலோடி, சங்கிலித் தையல்

57. மதிய வேளை உணவுத் தட்டில் சோறு, மீன், மரவள்ளிக்கிழங்கு, பயறு போன்ற உணவுகள் காணப்பட்டன. போசாக்கான உணவைப் பெறுவதற்கு மேலும் சேர்க்கப்பட வேண்டிய உணவு
(1) பொன்னாங்கண்ணி (2) இறைச்சி (3) உருளைக்கிழங்கு

58. குளங்கள் அதிகளவு காணப்படும் மாகாணம்
(1) வட மாகாணம் (2) வட மத்திய மாகாணம் (3) கிழக்கு மாகாணம்

59. பண்டைய மன்னர்கள் மழை நீரைச் சேகரித்து மீண்டும் பயன்படுத்துவதற்காக குளங்களை அமைத்தார்கள். இதனால் எமது நாடு எதில் தன்னிறைவாக விளங்கியது.
(1) தேயிலை (2) தேங்காய் (3) அரிசி

60. "தினமும் பத்திரிகை வாசிப்பது நல்ல பழக்கமாகும்" என்பதைத் தலைப்பாகக் கொண்டு மூன்று வாக்கியங்கள் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும். எழுவாய் பயனிலைத் தொடர்பும் எழுத்துக் கூட்டலும் சரியாக இருத்தல் வேண்டும்)

(1) ……..
……..
(2) ……..
……..
(3) ……..
……..

www.ikedu.lk

மாகாணக் கல்வித் திணைக்களம்
வடக்கு மாகாணம்

தரம் 5 பயிற்சிப் பரீட்சை 3 (28.07.2022)

புள்ளித்திட்டம்

வினாத்தாள் I (விடைகள்)

3

01)	1	11)	3	21)	2	31)	2
02)	2	12)	3	22)	3	32)	2
03)	3	13)	2	23)	1	33)	1
04)	3	14)	1	24)	2	34)	1
05)	2	15)	2	25)	3	35)	2
06)	3	16)	3	26)	1	36)	2
07)	1	17)	1	27)	1	37)	2
08)	2	18)	2	28)	1	38)	2
09)	3	19)	1	29)	2	39)	2
10)	2	20)	1	30)	3	40)	3

வினாத்தாள் II (விடைகள்)

வினா இல		விடைகள்	புள்ளிகள்
01)	(i)	கங்கைக்கரை	01 புள்ளி
	(ii)	ஐயாயிரம்	01 புள்ளி
	(iii)	பகைவரை	01 புள்ளி
	(iv)	நல்லநல்ல	01 புள்ளி
	(v)	திசை	01 புள்ளி
	(vi)	உரைத்தான்	01 புள்ளி
02)	படித்தார்கள்		01 புள்ளி
03)	மகாத்மா காந்தி சத்தியத்தைத் தனது வாழ்க்கையில் கடைப்பிடித்து வரலாற்றில் இடம் பிடித்தார்.		01 புள்ளி
04)	“கல்விக்கு அழகு கசடற மொழிதல்” என்றனர் நம் முன்னோர்.		01 புள்ளி
05)	(i)	நாகரிகம்	01 புள்ளி
	(ii)	புடைவை	01 புள்ளி
06)	(i)	ஓர் உதாரணமே போதும் / ஓர் உதாரணம் போதும்	01 புள்ளி
	(ii)	வெள்ளம்	01 புள்ளி

www.ikedu.lk



zoom

மகத்தான கல்விக்கு
உங்கள் ஆசான்

- ICT
- Maths
- English
- Commerce
- Tamil
- History
- Science
- Sinhala
- இன்னும் பல

தரம்
01-A/L

Medium

தமிழ்/ English

76667-4945

தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள்
தரம் 1 தொடக்கம் 5 வரை நடைபெறுகின்றன

www.learneasy.lk || www.lkedu.lk

07)	(i)	குழியும்	01 புள்ளி
	(ii)	புகழும்	01 புள்ளி
08)	(i)	பட்டிமன்றம்	01 புள்ளி
	(ii)	பன்னசாலை / பர்ணசாலை	01 புள்ளி
09)	மரத்தினது வேர்கள் நீரை நாடிச் சென்றன.		01 புள்ளி
10)	(i)	x	01 புள்ளி
	(ii)	x	01 புள்ளி
	(iii)	✓	01 புள்ளி
	(iv)	✓	01 புள்ளி
11)	(i)	வானவில்	01 புள்ளி
	(ii)	நீர்வீழ்ச்சி	01 புள்ளி
12)	(i)	Pine apple	01 புள்ளி
	(ii)	Kite	01 புள்ளி
13)	(i)	I sweep the floor	01 புள்ளி
	(ii)	This is a mosque	01 புள்ளி
14)	புதன்கிழமை / புதன்		01 புள்ளி
15)	என்ன லமய்		01 புள்ளி
16)	முப்பதாயிரத்து ஏழு		02 புள்ளிகள்
17)	5251		02 புள்ளிகள்
18)	vii		02 புள்ளிகள்
19)	(i)	1914	01 புள்ளி
	(ii)	242	01 புள்ளி
20)	7,11,15,19		02 புள்ளிகள்
21)	203		02 புள்ளிகள்
22)	2 கட்டங்கள்		02 புள்ளிகள்
23)	5 790		02 புள்ளிகள்
24)	14		02 புள்ளிகள்
25)	15		02 புள்ளிகள்
26)	கிழக்கு		02 புள்ளிகள்
27)	மு.ப.11.30		02 புள்ளிகள்
28)	(i)	340.00	02 புள்ளிகள்
	(ii)	144.00	02 புள்ளிகள்
29)	(i)	4 வரை நிழற்ற வேண்டும்	02 புள்ளிகள்
	(ii)	27	02 புள்ளிகள்

30)	**2**	**36)**	**1**	**42)**	**1**	**48)**	**2**	**54)**	**3**
31)	**3**	**37)**	**1**	**43)**	**3**	**49)**	**3**	**55)**	**1**
32)	**3**	**38)**	**2**	**44)**	**1**	**50)**	**1**	**56)**	**2**
33)	**1**	**39)**	**2**	**45)**	**3**	**51)**	**2**	**57)**	**1**
34)	**2**	**40)**	**1**	**46)**	**1**	**52)**	**3**	**58)**	**2**
35)	**3**	**41)**	**1**	**47)**	**3**	**53)**	**1**	**59)**	**3**

(30 புள்ளிகள்)

60) பொருத்தமான வாக்கியங்கள் (6 புள்ளிகள்)

- முழு விடைத்தாளையும் கருத்தில் கொண்டு உறுப்பமையவும் தெளிவாகவும் எழுதப்பட்டிருப்பின் 2 புள்ளிகள் வழங்குக.

www.lkedu.lk